# அன்பின் பலியாய் ஏற்பாய்

அன்பின் பலியாய் ஏற்பாய் - உம்மை
அணுகிடும் எளியவர் வேண்டுதல் கேட்பாய்
அன்பின் பலியாய் ஏற்பாய்
புண்படும் மனதின் துயர் தீர்ப்பாய் (2)
எமை புண்ணிய வாழ்வில் நிலைபெற செய்வாய்
அன்பின் பலியாய் ஏற்பாய்

வாழ்வின் கொடைகள் பெறுகின்றோம் - அருள்
வள்ளலுன் கருணையில் வாழ்கின்றோம் } (2)
முழு முதல் தலைவா இறைஞ்சுகின்றோம் (2)
எம்மை திருப்பலிப் பொருளாய்த் தருகின்றோம்
அன்பின் பலியாய் ஏற்பாய்

படைப்பின் மீதே பரிவிருக்க - அந்த
பரிவால் உன் மகன் உயிர் கொடுக்க } (2)
படைப்பே உம்மால் மகிழ்ந்திருக்க (2)
உன்னில் படைத்தோம் தூய்மை நிறைந்திருக்க

அன்பின் பலியாய் ஏற்பாய் - உம்மை
அணுகிடும் எளியவர் வேண்டுதல் கேட்பாய்
அன்பின் பலியாய் ஏற்பாய்
புண்படும் மனதின் துயர் தீர்ப்பாய் (2)
எமை புண்ணிய வாழ்வில் நிலைபெற செய்வாய்
அன்பின் பலியாய் ஏற்பாய்